பியகம பிரதேச சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பியகம பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பியகம பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நியமத்தின் 2 ஆம் அத்தியாயத்தின் 2.5 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்க வேண்டியிருந்த போதிலும் முன்னைய ஆண்டிற்குரிய மீளாய்வாண்டிற்கு கிடைக்கப் பெற்ற நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 25,447,678 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 234,024,043 மீளாய்வாண்டின் வருமானமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	இந்த வருமானம் எங்களின் இந்த நிர்வாகத்திற்கு அப்பாற்பட்டிருந்தமையால் குறித்துரைத்த ரீதியில் கணிப்பிட முடியாது இருந்த போது காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.	நியமத்தின் பிரகாரம் சரியாகக் கணக்கீடு செய்தல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படாத வேலைக் கடன் கொடுத்தோர் பெறுமதி ரூபா 469,678 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி	சரியாகக் கணக்கீடு செய்தல் வேண்டும்.

	கணக்கு/ நடைமுறை வேலை கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.	செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ஆ)	வேலைக் கடன்பட்டோர் ரூபா 469,678 மீண்டெழும் அல்லாத செலவினமாக அரசாங்கத்தின் மாணிய கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாகக் கணக்கீடு செய்தல் வேண்டும்.
(இ)	ரூபா 228,310 ஆன அலுவலக உபகரணங்கள் இயந்திரமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாகக் கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஈ)	நடைமுறை வேலையின் கீழ் காணப்பட்ட மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 4,251,697 கட்டிடக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. மேலும் கட்டிடம் ஆகக் கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,480,105 மீண்டும் திரண்ட நிதியத்தில் வரவு வைத்து நடைமுறை வேலைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாகக் கணக்கீடு செய்தல் வேண்டும்.
(உ)	ஹெய்யன்துடுவ வடக்கு சனசமூக மண்டபக் கட்டடமாக கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கில மீதி ரூபா 415,965 மற்றும் பெறுமானத் தேய்வுக் கணக்கின் மீதி ரூபா 205,350 குறைத்தும் திரண்ட நிதியக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 210,615 அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாகக் கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஊ)	முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 626,085 செலவினம் திரண்ட நிதியத்தில் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் செலவினமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாகக் கணக்கீடு செய்தல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2019 திசெம்பர் 24 ஆம் திகதிய இலக்கம் 2155/8 என்ற அதிவிசேட வர்த்தமானியின் மூலம் விதிக்கப்பட்ட மேல் மாகாண பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாகத்திற்கு உரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளை இலக்கம் 83(ii)	விதியின் பிரகாரம் ஊழியர் கடன்களுக்காக தனிப்பட்ட முற்பணக் கணக்கு பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை.	முற்பண எல்லையினை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	விதிகளின் பிரகாரம் முற்பணக் கணக்கு பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(ஆ)	2020 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய இலக்கம் LGD/09/2019/(1) என்ற உள்ளூராட்சித் திணைக்களம் (மேல் மாகாணம்) சுற்றறிக்கை இணைப்பு இலக்கம் 01	ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் 07 வகைகளைப் பதிவேடுகள் நாளது வரையாகப் பேணிச் செல்லப்படாது இருந்ததுடன் உப அலுவலகங்களில் தனிப்பட்ட பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் நாளது வரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2024 சனவரி 10 ஆந் திகதி இலக்கம் 01/2024 என்ற தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தி	முன் அங்கீகாரம் இன்றி மாதாந்த வாடகையின் அடிப்படையில் 12 வாகனங்கள் பெறப்பட்டு ரூபா 22,260,191 செலுத்தப்பட்டிருந்தது.	வாடகை அடிப்படையில் பதிவு செய்த கூறுவிலையின் கீழ் 12 வாகனங்களின் சேவை 2024 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்தது.	சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 144,345,586 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 201,645,061 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்ப ட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா(000)	ரூபா(000)	ரூபா(000)	ரூபா(000)	ரூபா(000)	ரூபா(000)	ரூபா(000)	ரூபா(000)
i.	ஆதன வரியும் வரியும்	80,462	81,477	84,873	68,333	78,937	81,142	85,082	68,915
ii.	வாடகை	7,747	10,506	10,110	12,049	8,188	7,024	6,382	11,653
iii.	அனுமதிப்பத்தி ரக் கட்டணம்	5,837	6,255	6,255	-	6,145	6,314	51,718	-
iv	ஏனைய வருமானம்	34,032	44,858	44,858	-	36,191	48,616	48,616	-
		128,078	143,096	146,096	80,382	129,461	143,096	191,798	80,568

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**வீதவரியும் வரியும்**		
(i)	2024 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மற்றும் வரி மீதி ரூபா 68,915,184 இனால் 2025 ஏப்ரல் 08 ஆந் திகதி அறவிடப்பட்ட பெறுமதி ரூபா 27,985,831 ஆனமையால் நிலுவையில் அறவிடப்பட்ட அளவு 40 வீதமான குறைந்த சதவீதத்தை கொண்டிருந்தது.	நிலுவை வருமானத்தை அறவிடல் 2025 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப் படுகின்றது.	நிலுவை ஆதனவரி வருமானத்தை விரைவாக அறவிடல் வேண்டும்.

(ii)	மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மற்றும் வரி மீதி ரூபா 68,333,229 ஆக இருந்ததுடன் அதில் 22 சதவீதம் அதாவது ரூபா 14,841,775 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்தும், ரூபா 19,532,340 அதாவது 29 சதவீதம் 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் இருந்தும், ரூபா 10,924,900 அதாவது 16 சதவீதம் 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் இருந்தும் நிலுவையாகக் காணப்பட்டது.	நிலுவை வருமானத்தை அறவிடல் 2025 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப் படுகின்றது.	நிலுவை ஆதனவரி வருமானத்தை விரைவாக அறவிடல் வேண்டும்.

(ஆ) வுாடகை

மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிலுவை வியாபார நிறுவனங்களின் வாடகைப் பெறுமதி ரூபா 11,085,550 ஆகக் காணப்பட்டதுடன் மொத்த நிலுவையில் 95 சதவீதம் அதாவது ரூபா 10,551,782 தொகை 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதி ஆகும்.	வழக்கு தொடரப்பட்டுள்ள கடைகள் தொடர்பாக நீதி மன்றத் தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் முத்திரை வைக்கப்பட்டுள்ள 05 கடைகளின் உரிமையாளர்களின் முகவரி காணப்படாமையினால் அறவிடுவதற்கு முடியாதுள்ளது.	நிலுவை வருமானத்தை தாமதம் இன்றி அறவிடல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டு வரையில் கிடைக்கப் பெற்ற 322 பொதுமக்கள் முறைப்பாடுகளில் 160 முறைப்பாடுகளுக்காக தீர்வு வழங்கப்பட்டிருக்கவில்லை.	முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கு காலம் எடுக்கின்றது.	பொது மக்கள் முறைப்பாடுகளைத் தீர்த்து ஆக்கபூர்வமான சேவையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	பிரதேச சபையில் 2024 முதல் 2027 வரையான நான்கு வருடத்	கூட்டுப் பசளைத் தளம் காணப்படாது	தேவையினை சரியாக இனங்கண்டு அவற்றை

	திட்டத்தின் பிரகாரம் ரூபா 1,200,000 செலவில் உக்குகின்ற கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி உர உற்பத்திக்காகவும், இலத்திரனியல் கழிவுப் பொருளை அகற்றுவதற்கு கேள்வி நடைமுறைகளின் பிரகாரம் நிறுவனம் ஒன்றை தெரிவு செய்வதற்காகவும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இருந்தமையால் கூட்டுப் பசளை உற்பத்தி செய்ய முடியாது இருந்ததுடன் இலத்திரனியல் கழிவுப் பொருட்களைச் சேகரித்தல், உடைந்த பொருட்கள் சேகரிப்பவர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது.	அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் போது ரூபா 10,033,996 செலவில் தில்கொட கழிவுப் பொருள் தளம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அது பயன் படுத்தப்பட்டிருக்கவில்லை.	மிகுதி பகுதியைப் பூர்த்தி செய்வதற்கு மாகாண சபையிடம் நிதியேற்பாடு கோரப்பட்டுள்ளது.	கழிவுப் பொருள் தளத்தை பயன்பாட்டிற்கு எடுத்து கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை முறைமைப்படுத்துதல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் 2000 ஆம் ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை வைப்புச் செய்யப்பட்ட ரூபா 795,947 ஆன 778 வீட்டு வாடகை வைப்புக்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பட்டோலை சரியானதாகும்.	வைப்பு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	பல வருட காலம் முதல் செலுத்துவதற்கு காணப்பட்ட பெறுமதி சேர் வரிக் கணக்கின் மீதி ரூபா 3,425,043 தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செலுத்துவதற்கு உள்ள மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	ஆயுர் வேத கட்டிடத்தை நவீனமயப்படுத்துவதற்காக 2023 ஆம் ஆண்டு வரையில் பிரதேச சபை நிதியத்தில் இருந்து ரூபா 38,750,057 செலவிடப்பட்டு நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டு	முதியோர் பகல் காப்பக நிலையத்திற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஏனைய நலன்புரி நிகழச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.	திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து இலக்கிடப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்துதல் வேண்டும்.

	04 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2025 சனவரி 29 ஆம் திகதி வரையிலும் இலக்கிடப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.		
(ஆ)	ரூபா 3,000,000 செலவில் 2001 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட பட்டிவில சனசமூக மண்டப கட்டிடத்தின் தரை மாடி மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாக சிலதில் இருந்து கீழ் மாடிக்கு நீர்க் கசிவு ஏற்பட்டமையால் கட்டிடம் மற்றும் தாய் சேய் சிகிச்சை நிலையத்தில் பயன் படுத்தப்படுகின்ற தளபாடப் பொருட்கள் உக்கி இருந்தது.	தரப் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பதற்கும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சபைக்குச் சொந்தமான சொத்துக்களை உச்ச அளவில் செயற்திறனாகப் பயன்படுத்துதல் வேண்டும்.
(இ)	பெறுமதி ரூபா 1,500,000 ஆன மீகஹவத்த கல்ஹேன வீதி சனசமூக மண்டபத்தின் கீழ் மாடி மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் சில கூரையின் பகுதியில் மரம் ஒன்று உடைந்து விழுந்தமையால் ஏற்பட்ட நிலைமையை நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	சபைக்குச் சொந்தமான சொத்துக்களை உச்ச அளவில் செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும்.
(ஈ)	பெறுமதி ரூபா 100,000 ஆன இஹல பியன்வில பெசன்வத்த சனசமூக மண்டபம் பயன்படுத்தப்படாமையால் காடு வளர்ந்து அழிவடைந்து இருந்ததுடன் பல்வேறு குற்றச் செயல்கள், துஷ்பிரயோக நடவடிக்கைகளுக்காக பயன்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.	எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	சபைக்குச் சொந்தமான சொத்துக்களை உச்ச அளவில் செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும்.
(உ)	பல்நோக்குக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக 2002 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2025 ஆம் ஆண்டு வரையில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் பெறுமதி ரூபா 479,094,500 ஆன தளபாடங்கள் மற்றும் பொருத்திகளுடனான கட்டிடம் 2025 யூன் 18 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. இந்த கட்டிடம்	காணி பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் கட்டிடத்தை ஆக்கபூர்வமான பணிகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களின் உரித்தை கையேற்பதற்கும் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	அமைந்துள்ள காணியில் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.		
(ஊ)	2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1,025,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட கலி பௌசர் 2020 ஆண்டின் பின்னர் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	நியாயமான காரணம் ஒன்றைக் குறிப்பிட்டு சேவை வழங்குவதற்கு பராமரித்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது.	சொத்துக்களை உச்ச அளவில் செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும்.
(எ)	2017 ஆம் ஆண்டு முதல் செயலிழந்து காணப்பட்ட ரூபா 200,000 ஆன டெக்டர் மீளாய்வாண்டின் போது பழுது பார்த்தலுக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் பூர்த்தி செய்து பயன்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.	பழுது பார்த்தல் மேற்கொண்டு கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கு பயன்படுத்தப்படும்.	சபைக்குச் சொந்தமான சொத்துக்களை உச்ச அளவில் செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும்.
(ஏ)	2024 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மெய்மையாய்வு சபை அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா 2,105,000 ஆன 09 குழாய்க் கிணறுகள் மூடப்பட்டிருந்ததுடன் பெறுமதி ரூபா 4,139,400 ஆன 26 குழாய்க் கிணறுகள் பயன்படுத்தப்படாது இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.	கிணறுகள் காணப்படுகின்ற இடங்களை இனங்காண்பதற்கு முடியாது இருந்ததுடன் கிணறுகளைப் பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.	சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	16 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 25/2014 மற்றும் 29/2019 சுற்றறிக்கைகளின் படி சேர்க்கப்பட்ட 02 முன் பள்ளிப் பாடசாலை ஆசிரியர் பதவிகள் மற்றும் 16 தொழிலாளர் பதவிகள் மிகையாகக் காணப்பட்டனர்.	அபிவிருத்தி உத்தியோகத்தர் 16 பேரும் 25/2014 மற்றும் 29/2019 சுற்றறிக்கைகளின் படி சேர்க்கப்பட்ட முன் பள்ளிப் பாடசாலை ஆசிரியர்கள் 02 பேரும், தொழிலாளர் பதவியில் 16 பேரும் மிகையாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.	மிகைப் பதவியணியினரை அங்கீகரித்துக் கொண்டு மனித வளத்தை ஆக்க பூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2019 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலத்தில் சேவையை விட்டுச் சென்ற, ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் மரணமடைந்த 12 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 1,442,440 அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்டது.	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை ஊழியர் கடனை பிணையாளர்களிடம் இருந்தேனும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபைக்குரிய பெறுமதி ரூபா 8,500,000 ஆன 01 றூட் 33.5 பேர்ச் காணியில் 05 நிரந்தர வீடுகள் நிர்மாணிக்கப்பட்டதுடன் அதில் 03 வீடுகள் உத்தேச திட்டத்தின் கீழ் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. அந்த காணிகளின் உரித்தை பிரித்து வைக்கப்படாது இருந்ததுடன் மிகுதி 02 வீடுகளின் உரித்தை மீள பெற்றுக் கொள்ளுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் (கம்பஹா) இனால் 2023 சனவரி 03 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்தும் 2025 மார்ச் 22 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை.	02 வீடுகளின் உரித்தை கையேற்பதற்கு சில சபை உறுப்பினர்கள் பரஸ்பர எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டமையால் எதிர்காலத்தில் புதிய சபையின் கீழ் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	சொத்துக்களின் உரித்து மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் வேண்டும்.
(ஆ)	சொத்துக்கள் மெய்மையாய்வு சபையினால் ரூபா 14,247,458 ஆன 04 கட்டிடங்கள் இனங்காணப்படாதிருந்ததுடன் ரூபா 500,000 ஆன கட்டிடம் பௌதீக ரீதியில் இனங்காண்பதற்கான தகவல்கள் சபையிடம் காணப்படவில்லை.	மெய்மையாய்வுக்கு உட்படாத கட்டிடங்கள் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கட்டிடங்களின் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	கூட்டுப் பெறுமதி ரூபா 1,000,000 ஆன 02 கட்டிடங்களின் உரிமைத்தன்மை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.	பரீட்சித்து தீர்மானம் எடுக்கப்படும்.	சொத்துக்களை இனங்கண்டு சொத்துக்களின் உரித்து மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் வேண்டும்.
(ஈ)	1995 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற ரூபா 500,000 ஆன டெக்டர் சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	கையளித்தல் தொடர்பாக பதிவேட்டைக் கண்டறிய முடியாது இருந்தமையால் கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு முடியாது இருந்தது.	சொத்துக்களின் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	ரூபா 3,997,856 கிரயத்தைச் செய்து நிர்மாணிக்கப்பட்ட சனசமூக மண்டபத்தின் மேல் மாடியின் யன்னல், கதவுகள் பொருத்தி, தரை மாடி தயாரிக்கப்படாது இருந்தமையால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்க வில்லை.	மதிப்பீடுகளைத் தயாரித்து கம்பஹா உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் மாவட்ட பொறியியலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.	சொத்துக்களை உச்ச அளவில் செயற்திறனாக பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நான்கு வருடத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் ரூபா 17.05 மில்லியன் ஆன 06 நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கும், 07 சனசமூக சபைகளை மீள் அமைப்பதற்கும், இணைய வழி முறைமையின் ஊடாக ஆதனவரி செலுத்துவற்கு திட்டமிடுவதற்கும் 30 சதவீதத்தினைப் பூர்த்தி செய்வதற்கும் இனங்காண முடியாது இருந்த சொத்துக்களில் 30 சதவீதத்தை இனங்காண்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மாதிரிகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாது இருந்தமை, பொது மக்கள் பங்குபற்றுதல் குறைவடைந்தமை, சனசமூக சபைகள் மீள் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை, புதிய சனசமூக சபைகளை ஸ்தாபிக்கப்படாமை, அங்கீகரிக்கப்பட்ட திட்டம் ஒன்று காணப்படாமையால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.	அடைந்து கொள்வதற்கு முடியான வகையில் திட்டங்கள் தயாரித்து அதன் இலக்கை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிதியேற்பாடு செய்யப்பட்ட தொகை ரூபா 24.55 மில்லியன் ஆன 15 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை.	நிதியேற்பாடு ஒதுக்கப்படாமை, சீரற்ற காலநிலை, பாடசாலை விடுமுறைக் காலம் மாற்றப்பட்டமை, அமுல்படுத்துதலின் தேவை ஒன்று ஏற்படாமை மற்றும் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டதற்கான காரணத்தின் அடிப்படையில் செயற்திட்டங்கள் அமுல்படுத்த முடியாது இருந்தது.	திட்டங்களை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் திட்டங்களைத் தயாரித்து அதன் பிரகாரம் இலக்குகளை ஸ்தாபித்து அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.